தினகரன்
Dinakaran

# சர்வதேச காடுகள் தின விழிப்புணர்வு பேரணி




▶ சர்வதேச காடுகள் தினத்தையொட்டி கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்க துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி.

**கோவை, மார்ச் 22:** கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்பட்டு வரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் சர்வதேச காடுகள் தினம் முன்னிட்டு காடுகளின் முக்கியத்துவம் குறித்த மெகா வாக்கத்தான் விழிப்புணர்வு பேரணி நேற்று நடந்தது. இந்த பேரணியை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன் துவங்கிவைத்து மாணவர்களுக்கான விழிப்புணர்வு சுவரொட்டியை வெளியிட்டார். பின்னர், காடுகள் மற்றும் புதுமைகள் சிறந்த உலகத்திற்கான புதிய தீர்வுகள் என்ற நடப்பாண்டின் கருப்பொருளை முன்னிலைப்படுத்தி, மரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மரங்கள், காடுகளை பாதுகாப்பது நமது கூட்டுப் பொறுப்பு என தெரிவித்தார்.

இதில், தலைமை விஞ்ஞானி கண்ணன் சி.எஸ். வாரியர், யசோதா உள்பட பலர் கலந்துகொண்டர். பேரணியில், கோவை அரசு கலைக்கல்லூரி, கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை பிஎஸ்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வனமரபியல் பணியாளர்கள் விழிப்புணர்வு பலகைகளை ஏந்தியவாறு பேரணியில் பங்கேற்றனர். பேரணி வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன வளாகத்தில் துவங்கிய பேரணி அவினாசி சாலை வழியாக மீண்டும் வனமரபியல் நிறுவனத்தை அடைந்தது. இந்த விழிப்புணர்வு பேரணியில் சுமார் 600 பேர் கலந்துகொண்டனர். பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. விழிப்புணர்வு சுவரொட்டியின் பிரதிகள் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது.

18. News in Dinakaran, Coimbatore, 22.03.2024, Observance of International Day of Forests by ICFRE-IFGTB EIACP.